கருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வளித்தல் – 2011–2012–ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர்களின் தேர்ந்தோர் பட்டியல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண். 5 நாள் 06.01.2012

படிக்கப்பட்டது:–

1) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.41125/2011/எப்1, நாள் 15.11.2011.
2) அரசாணை (ப) எண்.3, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 06.01.2012.
3) அரசாணை (ப) எண்.4, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 06.01.2012

*****

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நகராட்சிப் பொறியியல் பணிகளில், கண்காணிப்புப் பொறியாளர்களாக தற்காலிகமாக பதவி உயர்வு பெற்ற கண்காணிப்புப் பொறியாளர்களின் பணி அப்பதவியில் வரன்முறைபடுத்தி ஆணையிடப்பட்டது.

2. மேலும் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணிகளில், தலைமைப் பொறியாளர் பதவி உயர்விற்கு காலிப் பணியிடம் 2 (இரண்டு) என நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டது.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்தில் பெறப்பட்ட பரிந்துரை மற்றும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணையின் அடிப்படையில், 2011–2012–ஆம் ஆண்டிற்கு, தலைமைப் பொறியாளராக பதவி உயர்வு பெறுவதற்கு கீழ்க்காணும் 2 (இரண்டு) கண்காணிப்புப் பொறியாளர்களின் தேர்ந்தோர் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது:–

| | | |
|---|---|---|
| 1 | ஆர். விஜயகுமார் | கண்காணிப்புப் பொறியாளர், மதுரை மாநகராட்சி. |
| 2. | ஆர். வெங்கடாசலம் | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–5. |

4. மேலே பத்தி மூன்றில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலினை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு தெரிவிப்பதுடன், பட்டியலில் சேர்க்கப்படாத நபர்களுக்கும் தெரிவித்து, அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை சம்பந்தப்பட்ட கோப்பில் பதிவு செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள்,
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழிமுறையாக).
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை– 600 108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி) அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
கூடுதல் தலைமைச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம்
மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை– 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.